DAILY THANTHI

Dated: 26.04.2025

### நாடாளுமன்ற தேர்தலின்போது

# தங்கதமிழ்செல்வன், டி.டி.வி.தினகரன் மீது பதிவான வழக்குகள் ரத்து

## ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, ஏப்.26-

நாடாளுமன்றத்துக்கு கடந்த ஆண்டு தேர்தல் நடந்தது. அப்போது, தேனி எம்.பி. தங்கதமிழ்செல்வன், தேர்தல் நடத்தை விதிகளை மீறியதாக அவர் மீது தேனி போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கை ரத்து செய்யக்கோரி சென்னை ஐகோர்ட்டில், தங்கதமிழ்செல்வன் மனு தாக்கல் செய்தார்.

இதேபோல, நாடாளுமன்ற தேர்தல் நடத்தை விதிகளை மீறி தேனியில் உள்ள ஆஞ்சநேயர் கோவிலுக்கு அ.ம.மு.க., தொண்டர்களுடன் டி.டி.வி. தினகரன் ஊர்வலமாக சென்று சாமி கும்பிட்டதாக அவர் மீது உத்தமபாளையம் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கை ரத்து செய்ய கோரி சென்னை ஐகோர்ட்டில் டி.டி.வி.தினகரன் மனு தாக்கல் செய்தார்.

நாடாளுமன்ற தேர்தலின்போது, திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் அனுமதி பெறாமல் பட்டாசு வெடித்ததாக அ.தி.மு.க., முன்னாள் எம்.பி. உதயக்குமார் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். அவரும் இந்த வழக்கை ரத்து செய்ய கோரி சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார்.

இந்த 3 மனுக்களும் நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன்பு விசாரணைக்கு வந்தது. மனுக்களை விசாரித்த நீதிபதி, மனுதாரர்கள் தங்கதமிழ்செல்வன். டி.டி.வி.தினகரன், உதயகுமார் ஆகியோர் மீது பதிவான வழக்குகளை ரத்து செய்து உத்தரவிட்டார்.

DINAMANI
Dated: 26.04.2025

# தங்க.தமிழ்ச் செல்வன், டிடிவி தினகரன் மீதான தேர்தல் நடத்தை விதிமீறல் வழக்குகள் ரத்து

**சென்னை, ஏப். 25:** தேர்தல் நடத்தை விதிமீறல் தொடர்பாக தேனி மக்களவை உறுப்பினர் தங்க.தமிழ்ச் செல்வன், அமமுக பொதுச் செயலர் டிடிவி தினகரன் உள்ளிட்டோர் மீதான வழக்குகளை ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த மக்களவைத் தேர்தலின்போது தேனி மக்களவை உறுப்பினர் தங்க.தமிழ்ச் செல்வன், தேர்தல் நடத்தை விதிகளை மீறியதாக, தேனி காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கை ரத்து செய்யக் கோரி தங்க.தமிழ்ச் செல்வன் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

இதேபோல்,தேனியில் உள்ள ஆஞ்சனேயர் கோயிலுக்கு ஊர்வலமாகச் சென்று சுவாமி தரிசனம் செய்து தேர்தல் நடத்தை விதிகளை மீறியதாக, டிடிவி தினகரன் உள்பட அமமுக உறுப்பினர்கள் மீது உத்தமபாளையம் காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்தனர். தனக்கு எதிரான இந்த வழக்கை ரத்து செய்யக் கோரி டிடிவி தினகரன் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

மேலும், மக்களவைத் தேர்தலின்போது திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் அனுமதி இல்லாமல் பட்டாசு வெடித்து தேர்தல் நடத்தை விதிகளை மீறியதாக, அதிமுக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதயகுமார் மீது நிலக்கோட்டை காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கை ரத்து செய்யக் கோரி உதயகுமார் வழக்கு தாக்கல் செய்தார். இந்த அனைத்து மனுக்களையும் விசாரித்த நீதிபதி ஜி.கே.இளந்திரையன், 3 வழக்குகளையும் ரத்து செய்து உத்தரவிட்டார்.